தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்குத்தான் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தக் கடுக்காயைப் பயன்படுத்துவதற்குரிய யோசனை இல்லை என்று சொன்னார்கள். ஆனால் சூரியகாந்தியிலே இருந்து எண்ணெய் எடுப்பதைப்போன்று இந்த கடுக்காயிலே இருந்து எண்ணெய் எடுக்க முடியும் என்று நிபுணர்கள் கூறி இருப்பதாகத் தெரிய வருகிறது. கல்கத்தாவிலே கடுக்காயிலே இருந்து எண்ணெய் எடுக்கின்ற ஒரு தொழிற்சாலை அமைந்திருப்பதாகவும் அதே போன்று விருத்தாசலத்திலேயும் ஒரு பிரிவை அமைக்கலாம் என்றும் யோசனை இருப்பதாக அறிகிறேன். அந்த யோசனையை நிறைவேற்ற அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வேளாண்மைத் தொழில் கழகத்தின் மூலமாக 26—12—1978 அன்று ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தக் கடிதத்திலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. விருத்தாசலத்தில் இருக்கக்கூடிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் மூலமாக இவ்வாறு செய்வதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையைப் பரிசீலிக்கலாம் என்பது குறித்துத் தெளிவாக அவர்களுக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விசைத்தறி தொழிலாளர் குறைந்த பட்ச ஊதியம்.

*வினா எண் 490—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) விசைத்தறி தொழிலாளர்களுக்கென அரசால் அறிவிக்கப்பட்ட குறைந்தபட்ச சம்பள உத்தரவு பல நிறுவனங்களில் அமலாக்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதனை அமலாக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?

1979 மார்ச் 21]

மாண்புமிகு திரு.எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர வர்களே, நான் நேற்றைய தினமே இதற்குப் பதில் கூறிவிட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது குறிப்பிட்ட சட்டப்பிரிவின்கீழ் விசைத்தறி தொழிலா ளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்யப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால் உடனடியாக இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரி லேயே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து சீக்கிரமாக அதனை அமல் நடத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர வர்களே, அதற்குரிய சட்டத்தை இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் கொண்டு வரவேண்டியதில்லை. குறைந்த பட்சக் கூலி நிர்ணயிக்க Minimum Wages Act, 1948 ஆண்டு, பிரிவு 3-ல் அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆகவே அந்த அதிகாரத்தை உபயோகப்படுத்திக் கூலி உயர்வு நிர்ணயிக்கப்படும் என்று சொன்னேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, விசைத்தறி தொழிலாளர்களில் சிலர் 20 தறிகளுக்கு மேல் வைத்திருக்கிறார் கள். அந்த மாதிரி தறிகளை அவர்கள் பினாமி பெயரில் வைத்துக் கொண்டு பாக்டரி சட்டத்தையே மீறக்கூடிய அள வில் நடைபெற்று வருகின்றது. சங்கரன்கோயில் தாலுக்கா, புளியங்குடி போன்ற இடங்களில் இவ்வாறு நடைபெற்று வருகிறது. அதற்குரிய அதிகாரிகளிடம் சொல்லியும் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலைமையில் அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலை வரவர்களே, எங்கெங்கு பாக்டரி சட்டத்திற்குப் புறம்பாக தொழிலதிபர்கள் செயல்படுகிறார்கள் என்று தெரிவித்தால் நான் அதற்கான அதிகாரிகளை அங்கு அனுப்பி வேண்டிய பரிகாரம் தேட முயற்சிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்று மாண்புமிகு திரு. ரமணி அவர்கள் ஒரு முறை சொன்னபோது ஒரு பெரிய அதிகாரியைக் கூட ஒரு தொழிற்சாலைக்கு அனுப்பி இருக்கிறேன் என்பதையும் அதற்காக திரு. ரமணி அவர்களே என்னைப் பாராட்டியிருக் கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த விசைத் தறி தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி நிர்ணயிக்கப் படும் என்ற உத்தரவாதத்தை அளிப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். குறைந்தபட்ச கூலி என்றால் ஒரு நாளைக்கு எவ்வளவு கூலி? அவர்கள் எவ்வளவு மணி நேரம் வேலை செய்யவேண்டும்? 8 மணி நேரமா? எப்படி கூலி நிர்ண யம் செய்கிறார்கள்? அதுமட்டுமல்ல. சில இடங்களில் விசைத் தறி தொழிலதிபர்கள் நியாயமான கூலி கொடுக்காமல் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொண்டு வருகிறார்கள். அவர் கள் தொழிலாளர்களைக் குறிப்பிட்ட நேரமும் வேலை வாங்கு வது கிடையாது, அதிக நேரம் வேலை செய்யச் சொல்கிறார் கள். ஆகவே இப்படிப்பட்ட நிலையினைப் போக்கி நியாய மான உரிமைகளை அந்தத் தொழிலாளர்கள் பெறுவதற்குரிய சட்டத்தை பிறப்பிக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவ ரவர்களே, இதற்கு முன்பு கூலி நிர்ணயம் செய்யப்பட்டது, 8—3—1975 அன்று. இப்போது நான்காண்டுகள் கழிந்துவிட்டன. அந்தக் கூலியையே இப்போதும் கொடுப்பது நியாயமாக இருக்காது என்று அரசு கருதுகிறது. ஏனென்றால் எஸ்கலேஷன் இன் ப்ரைஸ் அன்ட் காஸ்ட் ஆஃப் லிவ்விங் இன் டெக்ஸ் ஏறியிருக்கிறது. ஆகவேதான் அந்தக் கூலியை சற்று உயர்த்தி நிர்ணயம் செய்யலாம் என்று அரசுக்கு எண்ணம் இருக்கிறது. அதற்காகத்தான் காலதாமதம் ஆகிறது. விரை விலே அதனை அறிவிப்பதற்கு அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு ஆர். மணிமாறன்: (பேரவைத் தலைவர் அவர் களே, இந்த விசைத்தறி தொழிலாளர்களுடைய ஊதி யத்தைக் குறைவாக கொடுப்பதோடு மட்டுமல்லாமல், அவர் களுடைய வேலை நேரத்தை அதிகப்படுத்தியும் அவர்களிடம் அடிமை சாசனம் எழுதி வைத்தால் போல் தொழிலாளர்களை வைத்து வேலை வாங்குகிற முறையில் ஆங்காங்கு விசைத்தறி தொழிலாளர்கள் இருந்து வருகிறார்கள். இதைப்பற்றி அர சுக்குக் குறிப்பாக தெரிவித்தால் இதன் மீது நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறதா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: 1948-ம் ஆண்டு குறைந்தபட்சக் கூலி சம்பந்தப்பட்ட சட்டத்தில் பீனல் கிளாஸ் இருக்கிறது. எங்கு தவறு நடக்கிறது என்று அரசுக்குத் தெரிவித்தால் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

1979 மார்ச் 21]

திரு து. இராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, விசைத் தறிகளைப் பொறுத்தவரை இதில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் கொத்தடிமைகளைப் போல் நடத்தப்படுகின்றார்கள். அவர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம், போனஸ் போன்ற வசதிகள், மற்றத் தொழிற்சாலைகளில் வழங்கப்பட்டு வரும் மருத்துவ வசதிகள், நிர்ணயிக்கப்பட்ட வொர்க் லோடு போன்றவைகளை நிர்ணயிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு.எஸ். இராகவானந்தம்: இவைகளைப்பற்றி தொழிற்சங்கங்கள் அந்தந்த தொழில் நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி வெற்றி பெறுவார்கள் என்று நம்புகிறேன். மேலும் இவைபற்றி தொழில் தகராறு எழுப்பினால் அரசு அதற்கு ஆவன செய்யும்.

திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, போனஸ் பற்றியெல்லாம் சம்பந்தப்பட்ட முதலாளிகளிடம் பேச்சு வார்த்தை நடத்திக்கொள்ளவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்படிப்பட்ட விசைத்தறி தொழிலாளர்களுக்கும் போனஸ் கொடுக்கவேண்டும் என்று சட்டத்தைத் திருத்துவதற்கு மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசாங்கம் சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: இதைப்பற்றி இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பே பதில் சொல்லியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, இப்போது கூறியதையும் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சிங்காநல்லூர் இ. எஸ். ஐ. மருத்துவ மனை.

*வினா எண். 491—திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை சிங்காநல்லூர் இ. எஸ். அய். மருத்துவ மனையின் அட்வைசரி கமிட்டியை மாற்றியமைத்து செயல்பட வைக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) இப்பொழுது உள்ள குழுவில் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரை அங்கத்தினராக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?